Engineer and he has sent a report stating that it is not necessary to construct a Travellers' Bungalow since there are no irrigation and building schemes in that area. The District Revenue Officer also has sent a report stating that there is a Travellres' Bungalow within 10 miles at Ramanathapuram and that it is not necessary. But the Government have got a plan to construct a Circuit House at Rameswaram.

Rural dispensary (Javadu Hills)

9 a.m. *603 Q.—SRI S. M. ANNAMALAI: கனம் செவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஜவ்வாது மலையில் வைத்தியசாலை (Rural Dispensary) ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா?

THE HON. SRI M. A. MANICKAVELU: No, Sir.

SRI S. M. ANNAMALAI: ஸார், ஜவ்வாது மலைக்கு ஒரு மொபைல் யூனிட் இருந்தது. அது பிறகு காவலூருக்கும், பிற்பாடு ஆலங்காயத்திற்கும் மாற்றப் பட்டிருக்கிறது. இரவில் பிரசவம் ஏற்பட்டால், ஆலங்காயத்திற்குப் போவது மிக்க கஷ்டமாக இருக்கிறது. இது பற்றி என்னைவிட அமைச்சருக்கு ஜவ்வாது மலையில் எவ்வளவு மக்கள் இருக்கிறார்கள் என்று தெரியும். ஆகவே அங்கே ஒரு தனி ஆஸ்பத்திரியை ஏற்படுத்த என்ன நடவடிக்கைகள் எடுக்கப் போகிறார்கள்?

THE HON. SRI M. A. MANICKAVELU: அங்கே ஒரு மொபைல் யூனிட்டு இருந்தது. இப்பவும் இருக்கிறது. அது கோமட்டேரி லிருந்து ஆலங்காயத்திற்கு மாற்றப்பட்டது. அங்கே டாக்டர் நிலைக்கவில்லை; அப்படியிருக்க மலைமீது டாக்டர் போகப் போவதே யில்லை. டாக்டர் இல்லாத ஆஸ்பத்திரி வேண்டுமானால் ஏற்படுத்தலாம்.

SRI S. M. ANNAMALAI: சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அந்த மாதிரி நிலைமை இருந்தது. ஆனால் இன்று பல அதிகாரிகள் மலைமேலேயே இருக்கிறார்கள். பீ-டீபிங், நர்சரிகள், எல்லாம் வைத்திருக்கிறார்கள். ஆகவே அங்கு ஒரு ஆஸ்பத்திரி ஏற்படுத்த மறு பரிசிலனை செய்வார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU: மற்ற அதிகாரிகள் இருக்கிறார்கள். ஆனால், டாக்டர்கள் அங்கே போவதில்லை. சிகிச்சை வசதி செய்யவேண்டியது அவசியம்தான். இப்பொழுது மொபைல் யூனிட் கொஞ்சம் கொஞ்சம் பரவி வருகிறது. டாக்டர் இருக்கக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தினால், அங்கே ஆஸ்பத்திரி வைக்கலாம். இப்பொழுது, மொபைல் யூனிட்டு மூலம் வசதி செய்யப்படுகிறது.

SRI NAGARAJA MONEGAR: அங்கத்தினர் மேல்நாட்டு வைத்திய வசதியைக் கேட்கிறார்களா அல்லது தென்னாட்டு முறையைக் கேட்கிறார்களா?

6th March 1961]

MR. SPEAKER: எதுவானல் என்ன? தாங்கள் எப்படி அங்கத்தினரைக் கேள்வி கேட்கலாம்?

Agriculture

*604 *Q.*—**SRI V. K. KOTHANDARAMAN:** கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் ஆபீசிலேயும் விவசாய அபிவிருத்திக்காக கீழ்க்கண்ட நவீன கருவிகளை வைப்பதற்கான உத்தேச முண்டா?

(1) டிராக்டர்கள்.

(2) புல்டோஜர்கள்.

(3) ராக் ட்ரில்லிங் மெஷின்கள்.

(இ) ஒவ்வொரு யூனியன் ஆபீசிலும் எத்தனை கருவிகள் வைக்கப்படும்?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI A. A. RASHEED : Is there any proposal to keep this machinery in every taluk, if not, in every panchayat union?

THE HON. SRI C. SUBRAMANIAM : Here, we are organising the supply of these tractors and bulldozers and other machines. It is not, however, possible to say whether we will be able to locate them in every taluk headquarters.

SRI S. SADASIVAM: இந்த ராக் ட்ரில்லிங் மெஷின் மாகாணத்தில் குறைந்த அளவில், இருப்பதால், மழை குறைவான காலத்தில், உபயோகமாக இருக்க, ப்ளாக் யூனிட்டுகளுக்குக் கொடுக்க முயற்சி எடுக்கப்படுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: எங்கெங்கே அவசியம் இருக்கிறதோ அங்கேயெல்லாம் இந்தக் கருவியைக் கொடுக்க சர்க்கார் முயற்சி செய்கிறது.

Price control

* 605 *Q.*—SRI V. K. RAMASWAMY MUDALIYAR (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the latest recommendations of the National Development Council regarding price control; and

(*b*) the recommendations of the Planning Commission with regard to price control?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) The Sub-Committee of the National Development Council set up for studying the problems of Price Policy and for making recommendations has met three times and considered various aspects of the problem. The committee has yet to finish its work.